## தரம் 10

## முதலாந் தவணை – 2020

## செயலட்டை (அலகு 1 – 3)

01. உலகில் உள்ள பொருள்கள் யாவிலும் மேலான பொருள் என்பதால் இறைவன் எவ்வாறு அழைக்கப்படுகின்றார்?
02. இறைவனை கடவுள் என அழைப்பதற்கான காரணம் யாது?
03. கடவுளின் இருநிலைகளும் எவை?
04. இறைவனின் எண் குணங்களும் எவை?
05. பஞ்சகிருத்தியம் என எதனைக் கூறுவர்?
06. இறைவனை நிர்விகாரி எனக் கூறுவதன் காரணம் யாது?
07. "ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லார்க்கு, ஆயிரம் திருநாமம் பாடித் தெள்ளேணம் கொட்டாமே" எனப் பாடியவர்?
08. "அரிது அரிது மானிடராதல் அரிது" எனப் பாடியவர்?
09. புற ஆசாரங்கள் சில தருக?
10. அக ஆசாரங்கள் சில தருக.
11. இந்தச் சரீரம் நமக்கு ஏன் கிடைத்தது என ஆறுமுக நாவலர் கூறுகின்றார்?
12. இறைவனுக்குச் சாத்த வேண்டிய "அட்டபுஷ்பங்களும்" எவை?
13. இறைவன் உவக்கும் இன்மலர்கள் என சுவாமி விபுலாநந்தர் கூறுபவை?
14. சைவம் வலியுறுத்தும் நாற்பாதங்கள்?
15. நான்கு வாழ்க்கைப் படிநிலைகளும் எவை?
16. ஒப்புரவு என்றால் என்ன?
17. எத்தகைய கல்வியால் எந்தப் பயனும் இல்லை என்கின்றார் வள்ளுவர்?
18. அன்பே சிவம் என்பதை வலியுறுத்தியவர்?
19. தவத்தை விட சிறந்தது என பாரதியார் எதனைக் குறிப்பிடுகின்றார்?
20. வாய்மை என்பதற்கு திருவள்ளுவர் கூறும் சிறப்பான வரைவிலக்கணம் யாது?

**விடைகள்.**

01. பரம்பொருள்
02. எல்லா உலகங்களையும் எல்லா உயிர்களையும் கடந்தும், அவற்றின் உள்ளேயும் இருப்பதால்
03. சொரூப நிலை, தடத்த நிலை
04. முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்குதல், இயற்கை உணர்வினனாதல், வரம்பில் இன்பம் உடைமை, தன்வயத்தனாதல், முடிவில் ஆற்றல் உடைமை, பேரருள் உடைமை, தூய உடம்பினனாதல்
05. இறைவன் நிகழ்த்தும் ஐந்தொழில்களை
06. ஐந்தொழில்களை ஆற்றும் போது எந்தவித மாற்றங்களுக்கும் உட்படாதிருப்பதால்
07. மணிவாசகர்
08. ஔவையார்
09. உடம்பைத் தூய்மையாக வைத்திருத்தல், வீட்டையும் சூழலையும் தூய்மையாக வைத்திருத்தல், சுத்தமான உணவை அருந்துதல், விதிப்படி பூசை செய்தல் முதலானவை..
10. மனதிலே இறைபக்தியோடு வாழ்தல், மனதிலே குற்றமான எண்ணங்களுக்கு இடங்கொடாது நல்ல சிந்தனைகளோடும் நல்ல பண்புகளோடும் நல்ல நடத்தைகளோடும் வாழ்தல் முதலானவை..
11. கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறுவதற்காக
12. கொல்லாமை, ஐம்பொறியடக்கம், பொறுமை, இரக்கம், அறிவு, உண்மை, தவம், அன்பு
13. உள்ளக்கமலம், கூப்பியகைக் காந்தள், நாட்டவிழி நெய்தல்
14. சரியை, கிரியை, யோகம், ஞானம்
15. பிரமச்சரியம், கிருஹஸ்தம், வனப்பிரஸ்தம், சந்நியாசம்
16. மற்றவர்கள் மேல் அன்பு பாராட்டி அரவணைத்து அவர்களுக்கு உதவி செய்து வாழ்வது
17. இறையுணர்வை ஏற்படுத்தாத கல்வியால்
18. திருமூலர்
19. பிற உயிர்களிடத்தில் செலுத்தும் அன்பினை
20. யாருக்கும் எவ்வகையிலும் தீமை பயக்காதனவற்றைப் பேசுதல்